# பெங்களூரில் தலைமை அனுபவ அதிகாரிகள் மாநாடு

பெங்களூரு, செப். 16: பெங்களூரில் தலைமை அனுபவ அதிகாரிகள் மாநாடு வெள்ளிக்கிழமை (செப். 17) நடைபெற உள்ளது.

இதுகுறித்து வியாழக்கிழமை பிக்பாஸ்கெட்டின் செயல் அதிகாரி பாலகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரோனா பொது முடக்கத்தில் வர்த்தகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் சென்றுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சிஎம்ஆர் மேலாண்மை பள்ளியும், பிக்பாஸ்கெட்டும் இணைந்து பெங்களூரில் வெள்ளிக்கிழமை தலைமை அனுபவ அதிகாரிகள் மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

காலை 9.45 முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் மாநாட்டில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த தலைமை அனுபவமிக்க மூத்த அதிகாரிகளான நயனா மிட்டர், ஜெகநாதன், மனோகர் டி.சட்லானி, சிவகுமார் வெங்கடேஸ்வரன், கிராந்தி ஷெட்டி, சுஷ்மா ராய், வருண் கிரிலால் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பாதிப்பிலிருந்து மீள்வது குறித்து உரை நிகழ்த்த உள்ளனர்.